# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2311/08 - 2022 දෙසැම්බර් මස 19 වැනි සඳුදා - 2022.12.19

*2311/08 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1969 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்டம்***

*1985ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க மற்றும் 1987ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவு மற்றும் 14ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 20 ஆவது பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்ஹ ஆகிய என்னால் விதிக்கப்படுகின்ற ஒழுங்கு விதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்ஹ,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு
மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சில் இருந்து,
கொழும்பு 01,
2022, திசெம்பர் 19.

**ஒழுங்கு விதிகள்**

1. இவ் ஒழுங்கு விதிகள் **"2022 ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகள்"** என அழைக்கப்படுகின்றது.

2. இவ் ஒழுங்கு விதிகள் 2022ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும்.


1A - PG 6126 — 376 (2022/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*3.* திருத்தம் செய்யப்பட்ட 2022ஆம் ஆண்டின் ஒகத்து மாதம் 23 ஆம் திகதிய 2294/30ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்ட 2022ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகள்,இதன் மூலம் மேலும் திருத்தம் செய்யப்படுகின்றது.

*3.1* மேலே குறிப்பிடப்பட்ட 2022ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகளில், I ஆவது உப அட்டவணையின், இவ்வர்த்தமானி பத்திரிகையின் **ஈ உப அட்டவணையில்** விபரிக்கப்பட்டுடுள்ள பொருட்கள் இதன் மூலம் நீக்கப்படுகின்றது.

*3.2* 2006ஆம் ஆண்டின் 01 ஆம் ஆண்டின் அரச வருமான (விஷேட ஒழுங்கு விதிகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம், இவ் வர்த்தமானப் பத்திரிகையின் **ஈ உப அட்டவணையில்** ஒழுங்குபடுத்திக் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் 2022ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் வரையான காலப் பிரிவிற்குள் இலங்கையின் எந்தவொரு துறைமுகத்தையோ / விமான நிலையத்தையோ வந்தடைந்த எந்தவொரு பொருள் /பொருள் இருப்பினையும் விடுவித்துக் கொள்வதற்காக இலங்கைச் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு இதன் மூலம் அதிகாரம் கையளிக்கப்படுகின்றது.

**ஈ உப அட்டவணை**

| | நிரல் I **இ.மு தலைப்பு** | நிரல் II **இ.மு குறியீடு** | | நிரல் III **விபரம்** | நிரல் IV **தற்காலிக இடைநிறுத்தல்** (TS) |
|---|---|---|---|---|---|
| *99* | *44.11* | | | **நிறசின்கள் அல்லது பிற சேதனப் பொருட்களால் பிணைக்கப்பட்ட அல்லது பிணைக்கப்படாத மரத்தாலான அல்லது பிற லிக்னின் பொருட்களாலான நார் அட்டைகள்** | |
| | | | - | நடுத்தர அடர்த்தியான நார் அட்டை (எம்.டி.எப்) | |
| | | | -- | தடிப்பமான 5 மில்லிமீற்றருக்கு மேற்படாதவை | |
| | | *4411.12.10* | --- | அடர்த்தியானது 0.8 கி/கன.செக்கு மேற்பட்டவை, பொறிமுறை ரீதியில் வேலை செய்யவோ அல்லது மேற்பரப்பு மூடவோபடாதவை | **TS** |
| | | | | | |
| *154* | *65.06* | | | **வரிசையாக ஒழுங்கமைக்கப்பட்ட அல்லது ஒழுங்கமைக்கப்படாத கீற்றுக்களினால் வடிவமைக்கப்பட்ட அல்லது வடிவமைக்கப்படாத ஏனைய தலைக் கவசங்கள் .** | |
| | | | - | பிற : | |
| | | *6506.91.10* | --- | குளியலின் போது அணியும் தொப்பி | **TS** |
| | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *309* | *85.25* | | | **வானொலி, தொலைபேசிகளுக்கான பரப்பும் கருவிகளும், வானொலி தந்திச் சேவை, வானொலி ஒலிபரப்புதல், தொலைக்காட்சி அல்லது ஒலிபரப்பு ஏற்கும் கருவிகள் ஒலிப்பதிவு திருப்பி ஒலித்தல் கருவிகள் இணைக்கப்பட்ட அல்லது இணைக்கப்படாத தெலைக்காட்சிக் கமராக்கள், நிலையியல் விம்ப வீடியோ கமராக்களும் பிற வீடியோ கமரா பதிவுக் கருவிகளும், டிஜிடல் புகைப்படம் பிடிக்கும் கருவிகள்.** | |
| | | | - | தொலைபேசி கமராக்கள், டிஜிடல் கமராக்கள் மற்றும் வீடியோ கமரா பதிவு செய்பவைகள் : | |
| | | *8525.80.10* | --- | தொலைக்காட்சி கமராக்கள் | **TS** |
| | | *8525.80.90* | --- | டிஜிடல் கமராக்கள் மற்றும் வீடியோ கமராக்கள் | **TS** |
| | | | | | |
| *356* | *95.06* | | | **இவ்வதிகாரத்தின் வேறெங்கும் குறித்துரைக் கப்படாத அல்லது சேர்க்கப்படாத உடற்பயிற்சி விளையாட்டுக்குரிய சாதனங்கள், உடற்பயிற்சி, ஏனைய விளையாட்டு (மேசை ரெனிஸ் விளையாட்டுக்கள் அடங்கலாக) அல்லது வெளிக்கள விளையாட்டுகளுக்கான பொருட்கள் நீச்சல் குளங்களும் நீர் விளையாட்டு குளங்கள்.** | |
| | | | - | கொல்வ் துடுப்புகளும், ஏனைய கொல்வ் சாதனங் களும் | |
| | | *9506.31.00* | -- | விளையாட்டு துடுப்புகள் முழுமையானவை | **TS** |
| | | | - | பின்னப்பட்ட அல்லது பின்னப்படாத ரெனிஸ், பூப்பந்தாட்ட அல்லது அது போன்ற மட்டைகள்: | |
| | | *9506.51.00* | -- | மைதான ரெனிஸ் விளையாட்டு மட்டைகள், பின்னப்பட்டதோ அல்லது பின்னப்படாததோ | **TS** |
| | | | - | கொல்வ் பந்துகளும் ரேபிள் ரெனிஸ் பந்துகளும் தவிர்ந்த பந்துகள்.: | |
| | | *9506.61.00* | -- | மைதான ரெனிஸ் பந்துகள் | **TS** |
| | | *9506.62.00* | -- | காற்று நிரப்பக்கூடிய | **TS** |
| | | | - | பிற : | |
| | | *9506.91.00* | -- | உடற்பயிற்சி விளையாட்டுகள் அல்லது விளையாட்டு களுக்கான பொருட்களும் சாதனங்களும் | **TS** |

4. 2022 ஆம் ஆண்டு 09 ஆம் திகதிய 2296/30ஆம் இலக்கம் கொண்ட அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகள் மூலம் திருத்தம் செய்யப்பட்ட 2020 ஆம் ஆண்டு 17 ஆம் திகதிய 2189/4ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்ட 2020 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகள், இதன் மூலம் மேலும் திருத்தம் செய்யப்படுகின்றது.

4.1 திருத்தம் செய்யப்பட்ட 2020 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகள் **I ஆவது உப அட்டவணையின்**, கீழ்க் குறிப்பிடப்படும் பொருட்கள் மற்றும் அவற்றுடன் தொடர்பானவை இதன் மூலம் நீக்கப்படுகின்றது.

| | I ஆவது நிரல் **ஒருங்கிணைந்த வகைப்படுத்தல் குறியீட்டுத் தலைப்பு** | II ஆவது நிரல் **ஒருங்கிணைந்த வகைப்படுத்தல் குறியீட்டுத் தலைப்பு** | | III ஆவது **நிரல் விபரம்** | IV ஆவது **நிரல் தற்காலிக இடைநிறுத்தல்** (L) |
|---|---|---|---|---|---|
| *37* | ***22.02*** | | | **சீனி அல்லது ஏனைய சுவையூட்டப்பட்ட பொருட்கள் சேர்க்கப்பட்ட அல்லது சுவையூட்டப்பட்ட, கனிம நீர் மற்றும் வாயு உள்ளடக்கப்பட்ட (எரேடட்) தண்ணீர் உட்பட தண்ணீர் வகைகள் மற்றும் தலைப்பு 20.09 இல் குறிப்பிடப்பட்ட பழங்கள் அல்லது மரக்கறிச் சாறு அடங்காத ஏனைய போதையற்ற பான வகைகள்** | |
| | | *2202.99.00* | - | ஏனையவை | |
| | | *2202.99.30* | --- | ‘‘உற்சாகப்படுத்தக் கூடிய பானமாக விற்பனை செய்யப்படுகின்ற பான வகைகள் | **L** |

***4.2*** இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் *2022* ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் *09* ஆம் திகதி தொடக்கம் *2022* ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் *19* ஆம் திகதி வரையான காலப் பிரிவிற்குள் இலங்கையின் எந்தவொரு துறைமுகத்தையோ / விமான நிலையத்தையோ வந்தடைந்த,மேலே ஒழுங்கு விதி *4.1* இல் குறிப்பிடப்பட்டு உள்ள எந்தவொரு பொருளையும் விடுவித்துக் கொள்வது,இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு நாயகத்தின் அனுமதியின் கீழ் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

***5.*** இவ் ஒழுங்கு விதிகள் வினைத்திறன் மிக்க வகையில் செயற்படுவதனை நோக்காகக் கொண்டு முன்னிட்டு இறக்குமதி மற்றும் ஏற்றுதிக் கட்டுப்பாட்டு நாயகத்தின் மூலம் இலங்கைச் சுங்கம் மற்றும் அனுமதிப் பத்திரம் பெற்ற வங்கிக்குத் தேவையான செயற்பாட்டு ஆலோசனைகள் வழங்கப்படும்.

EOG 12 - 0349

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.